# ஆசிரியர் தின விழா [05.09.2022] அறிக்கை

கோபி பி கே ஆர் மகளிர் கலை கல்லூரியில் செப்டம்பர் 5 ம் நாள் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. பரத நாட்டியதுடன் விழா தொடங்கப்பட்டது. "ஆசிரியர் பணியில் மேலோங்கி நிற்க வேண்டியது - அன்பே!! அறிவே!!" என்னும் தலைப்பில் ஆசிரியர்களுக்கான சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. தன்னம்பிக்கை பேச்சாளர்,முனைவர் ஷர்மிளா பானு அவர்கள் பட்டிமன்றத்தின் நடுவராக பங்கேற்றார். இரு அணி ஆசிரியர்களும் தங்கள் வாதங்களை முன் வைத்தனர். இறுதியாக நடுவர் அவர்கள், அன்புடன் கூடிய அறிவையும், அறிவோடு கூடிய அன்பயும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார். இவ்விழாவில் கல்லூரி தாளாளர், முதன்மை செயல் அதிகாரி, முதல்வர், துணை முதல்வர், துறை தலைவர்கள் மற்றும் பேராசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வினை கல்லூரியின் கணித துறை மாணவிகள் ஏற்பாடு செய்து தொகுத்து வழங்கினர்.